[1990 மே 10

பத்திர நகல் எடுத்தல்

*3704 திரு எஸ். ஆர். முனிரத்தினம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்திரங்கள் பதிவு செய்யும்போது பத்திர நகல் எடுப்பதற்கு தேர்வு வைத்து லைசென்ஸ் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

9-15 மணி

திரு. அ. இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகள் நிறைய பேர் வேலையின்றி இருக்கிறார்கள். ஆகையால், பத்திரம் எழுத, நகல் எடுக்க, வேலையில்லாப் பட்டதாரிகள், வழக்கறிஞர்கள்தான் எழுதவேண்டும் என்ற உத்தரவு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையில் ஆவண எழுத்தர் மற்றும் நகல் எடுப்போர் ஆகியோர்களைத் தேர்வு செய்வதற்கு தற்போது உள்ள விதிகளின்படி அவர்களது வயது, சொத்து "as such" அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு பணி புரிகிறார்கள். இம்முறையினை மாற்றியமைத்து கல்வித் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு வைத்து தேர்ந்தெடுக்கும்போது, படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புக் தர ஏதுவாகும் என்ற வகையில் சட்டப்பேரவையில் நான் ஒரு முறை உறுதியளித்தது உங்களுக்கு நினைவிலே இருக்கும். அந்த அடிப்படையில் அந்த விதிகளுக்கு உரிய திருத்தம் செய்ய செயற்குறிப்பு பெறப்பட்டு சுற்றோட்டத்தில் ஆணையும் பெறப்பட்டுள்ளது. தகவலுக்காக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பத்திர நகல் எடுப்பவர்களுக்கு எட்டாம் வகுப்பு வரையில் படித்தவர்களுக்கு துறையில் முதன்முதலில் 1974-ஆம் ஆண்டு தேர்வு நடத்தி 8,358 நபர்களுக்கு பத்திர நகல் எழுத லைசென்சு வழங்கப்பட்டது. தற்போது அதனைப் பள்ளி இறுதித் தகுதி நிலைக்கு உயர்த்தி மீண்டும் தேர்வு நடத்த அரசிற்குக் கோப்பு எண். 14781-ஐ 3/88-இல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணை எதிர்ப்பார்க்கப்படுகிறது என்ற தகவலை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆக, படித்தவர்களுக்கு, படித்தும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு

1990 மே 10]

வாய்ப்பளிக்கிறவகையில் உரிய முறையில் நிலைமைகள் மாற்றியமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை நான் இந்த அவையில் கேள்வி கேட்ட உறுப்பினருக்கும், அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி, அதைக்கேட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதன் மூலம் வேறு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பில்லாமல் போகும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள திருத்தலத்தை சுற்றுலா மையமாக்குதல்.

* 3498 திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு இந்துசமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளதிருத்தலத்தை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள தீர்த்தகிரிமலையை மாவட்ட உலாத் தலமாக தேர்தெடுத்து அதன் மேம்பாட்டு பணிகளுக்காக ரூ. 4·00 இலட்சம் இதுகாறும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் என்பது தருமபுரி மாவட்டத்தில் மிகப் புகழ்பெற்ற ஒரு ஆலயம். அந்த தீர்த்தகிரி சுவாமியைப் பார்க்க நம்முடைய மாண்புமிகு கந்தசாமி சுவாமி அவர்கள் இரவு 7 மணிக்கு நடக்க ஆரம்பித்து . . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டத்தட்ட கந்தசாமி சுவாமி என்றே முடிவு செய்து விட்டீர்களா? (சிரிப்பு)

திரு. வ. முல்லைவேந்தன் : நடக்க ஆரம்பித்து 11 மணிக்குத் தான் கீழே இறங்கினார். அவ்வளவு கரடுமுரடான பாதைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த சுவாமி கோயிலுக்கு ஒரு மலைப்பாதை அமைக்கவேண்டுவதோடு, அங்கே ஒரு சுற்றுலா விடுதியும் கட்டித் தர அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் தருமபுரி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றபோது இரவு 8 மணிக்குத் தொடங்கி ஏறத்தாழ 10 மணி வரை அந்த மலையிலே